<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

**<u>O.S.No. 33/2014</u>**

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ம் நாளன்று வாதி/பிரதிவாதி சாட்சியாக வா.சா.2-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.N.அன்பழகன், இருக்கை எழுத்தர் நிலை I அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : கருப்பண்ணன் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை</u>

நான் வெண்ணமலை அஞ்சல், வடுகப்பட்டியில் வசித்து வந்து, எலக்ட்ரிக் கடை வைத்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் கேட்டுள்ள ஆவணங்களுடன் முன்னிலையாகியுள்ளேன். பிரதிவாதியை எனக்கு தெரியும். பிரதிவாதியின் அம்மா என் ஊரில் பிறந்தவர். அவரை எனக்கு சிறுவயது முதலே தெரியும். கிரய ஆவணங்களில் சாட்சி கையெழுத்து போடுவதற்கு நடராஜன் என்னை கூப்பிட்டாரா என்றால் கூப்பிடவில்லை. நான் ஒரு கிரயத்திற்காக பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றிருந்தேன். அங்கு வைத்து சாட்சி கையெழுத்து போடச்சொன்னார்கள். நான் சாட்சி கையொப்பம் போட்டேன். எத்தனை ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. என் முன்பு வேறு எதுவும் நடக்கவில்லை.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பதிவாளர் அலுவலகத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் என் பெயரில் ஒரு நிலம் வாங்கினேன். அந்த நிலம் பதிவு செய்வதற்காக சென்றேன். 08.07.2011 அன்று நான் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். என் பெயரில் உள்ள கிரய ஆவணம் என் வசம் உள்ளது. அசல் ஆவணம் என் வீட்டில் உள்ளது. புகைப்பட நகல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அசல் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேன்.

<u>மறு விசாரணை -</u> இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>

**<u>O.S.No. 33/2014</u>**

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ம் நாளன்று வாதி/பிரதிவாதி சாட்சியாக வா.சா.3-வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.N.அன்பழகன், இருக்கை எழுத்தர் நிலை I அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : முத்துச்சாமி | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை</u>

நான் ஆத்தூர் கிராமம், பெரியவடுகப்பட்டியில் வசித்து வந்து, விவசாயம் செய்தும், லாரி வைத்தும், மோட்டார் வாகன உதிரிபாகங்கள் விற்பனை செய்தும் தொழில் செய்கிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன். எனக்கு பிரதிவாதியை தெரியும். அவர் என் அக்கா மகன். பிரதிவாதியின் அக்காவை நான் திருமணம் செய்துள்ளேன். என்னுடைய தம்பி பிரதிவாதியின் மற்றொரு அக்காவை திருமணம் செய்துள்ளார். வாதி கோகுலை எனக்கு தெரியும். அவர் சிறுவயதில் குழந்தையாக இருக்கும்போது, கீழே கிடந்த குழந்தையை காமாட்சி கோவில் பூசாரியிடம் கொடுத்தனர். கோவில் பூசாரி, ராமலிங்கம் என்பவரிடம் குழந்தையை வளர்ப்பதற்காக கொடுத்தார். அப்போது நான் உடனிருந்தேன். நான் ஊர் கொத்துக்காரர் என்பதால் மாசி மாதம் சிவராத்திரி அன்று கோவிலுக்கு சென்றிருந்தேன். ராமலிங்கத்தின் மனைவி தெய்வானை. ராமலிங்கம் எனக்கு பங்காளி முறை. பிரதிவாதி நடராஜன் 2011ம் வருட வாக்கில் என்ன தொழில் செய்தார் என்றால் எந்ததொழிலும் கிடையாது. அவருக்கு வசதி வாய்ப்புகள் கிடையாது. என்னிடம் கிளீனராக இருந்தார். நடராஜன் என்பவர் கோகுல் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய வந்தார். நான் அவரிடம் நீ தேவையில்லாமல் பண்ணுகிறாய், என் பேரை கெடுக்காதே என்று சொன்னேன். வழக்குச்சொத்து

எங்குள்ளது என்று எனக்கு தெரியும். ராமலிங்கத்திற்கு பக்கத்தில் உள்ள காடு நடராஜனுக்கு சொந்தமானது. நடராஜனும், ராமலிங்கமும் உறவினர்கள்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு 1979ம் வருடத்தில் திருமணமானது. எனக்கு பிரதிவாதியுடன் தற்போதும் பேச்சுவார்த்தை உள்ளது. வாதியை எனக்கு குழந்தை முதல் தெரியும். நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை, மாசிபெரியசாமி கோவிலில் வைத்து வாதியை கொடுத்தார்கள். தத்துக்கொடுக்கவில்லை. வளர்க்க சொல்லி கொடுத்தார்கள். எந்த தேதியில் கொடுத்தார்கள் என்று தெரியாது. 30 வருடங்களுக்கு முன்பு கொடுத்தார்கள். வாதியின் அப்பா, அம்மா யாரும் இல்லை. அவர்கள் யாரென்று எனக்கு தெரியாது. வாதியை வளர்க்கச் சொல்லி ராமலிங்கத்திடம் கொடுத்தார்கள். அப்போது அவரது மனைவி தெய்வானையும் உடனிருந்தார். ராமலிங்கம் எனக்கு பங்காளி. அவர் ஊர் குளத்துப்பாளையம். அவருடைய நிலத்திற்கு அருகில் நான் மோட்டார்வாகன உதிரிபாகங்கள் கடை வைத்துள்ளேன். அந்த நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் ராமலிங்கம் நீர்பாய்ச்சி விவசாயம் செய்கிறார். அதை வைத்து அது ராமலிங்கம் இடம் என்று கூறுகிறேன். எனக்கும், பிரதிவாதிக்கும் தற்போது நல்ல உறவுமுறை கிடையாது என்றும், அதனால் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.